

29 MAR, 2023

# Man arrested for smuggling contraband cigarettes worth RM500,000

Malaysian Nanban, Malaysia



## வீட்டில் வெ.5 லட்சம் மதிப்புடைய கடத்தல் சிகரெட்டை பதுக்கி வைத்திருந்த ஆடவர் கைது!



ரந்தாவ் பாஞ்சாங், மார்ச் 29-

கடந்த வாரத்தில் கோல கிராயிலுள்ள வீட்டில் அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடி சோதனையில் வெ.541,749 மதிப்புடைய கடத்தல் சிகரெட்டுகளை பதுக்கி வைத்திருந்த ஆடவர் கைது செய்யப்பட்டார்.

அந்த வீட்டில் நடக்கும் நடவடிக்கையை கண்காணித்த பின்னர் ரந்தாவ் பாஞ்சாங் சுங்கத் துறையின் அமலாக்கப் பிரிவினர் அங்கு அதிரடி சோதனையை மேற்கொண்டதாக கிளந்தான் மாநில சுங்கத் துறையின் இயக்குநர் வான் ஜமால் அப்துல் சலாம் வான் லோங் தெரிவித்தார்.

இச்சோதனையில் அந்த வீட்டின் உரிமையாளரான 40 வயதிற்குட்பட்ட ஆடவர் கைது செய்யப்பட்டதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கார்களையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். சம்பந்தப்பட்ட சிகரெட்டை அந்நபர் தென் பகுதியிலுள்ள மாநிலத்திலிருந்து இங்கு கொண்டு வந்துள்ளது விசாரணையில் தெரியவந்தது. இந்த விவகாரம் செக்ஷன் 135(1)(டி) சுங்கத் துறை சட்டம் 1967இன் கீழ் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளது.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.



29 MAR, 2023

# Man arrested for smuggling contraband cigarettes worth RM500,000

Malaysian Nanban, Malaysia



## SUMMARIES

த்தி ப ட்ட ன

Kelantan Customs (JKDM) arrested a man for smuggling cigarettes worth RM551,749 during raids in Kuala Krai last week. Kelantan Customs director Wan Jamal Abdul Salam Wan Long said the raids were carried out by the Enforcement Operations Team from the Rantau Panjang branch based on information received and surveillance carried out. Investigations would be carried out under the Customs Act 1967.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.